# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2304 - 2022 ඔක්තෝබර් මස 28 වැනි සිකුරාදා - 2022.10.28

*2304 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# *பகுதி* III *- காணிகள்*

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 284 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 288 |



***வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான***

***முக்கிய அறிவித்தல்கள்***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்***, *அதாவது 2022, நவெம்பர் மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, நவெம்பர் மாதம் 04 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக் கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*



283 - B 082395 - 353 (2022/10)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

இணைப்பு 09

**இலங்கை மகாவலி அதிகார சபை**

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட கொடைப் பத்திரத்தை இரத்துச் செய்தல் - (பிரிவு 104) தொடர்பான அறிவித்தல்**

இலங்கை மகாவலி அதிகாரியின் அம்பாறை மாவட்டத்தில் தெஹியத்தகண்டிய, பிரதேச செயலாளர் பிரிவின் 'சீ' வலயத்தில் வதிவிட திட்ட முகாமையாளர் இமிகாமி முதியன்சலாகே உவய கல்யான குமார ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆவது உப பிரிவின் கீழ் மதிப்பிற்குரிய அதி மேன்மை தங்கிய சனாதிபதியவர்களால் 2005.11.06 ஆந் திகதி கையளிக்கப்பட்டுள்ள இலக்கம் அம்/ சீ/ மெத/ பிரா/13420 (வயல் நில காணி) ஐ உடைய கொடைப்பத்திரத்தின் உரிமையாளரான இல.11, மெதகம, வெவகமவில் வதியும் கந்தே கெதர வீரக்கோண் இற்குக் கையளிக்கப்பட்டு அம்பாறை மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் E- 59/ 76 இன் கீழ் 2007.01.10 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணிக்குக் பின்னுரிமையாளராவதற்காக சட்டப்படி உரிமையாளர் இல்லாத படியால் மற்றும் அவர் விரும்பாததால் பின்னுரிமை தன்மைக்கு எவருமில்லையெனப் பதிவாகியிருப்பதால் அவ் வழங்கல் பத்திரத்தைக் குறித்த சட்டத்தின் 104 ஆவது பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பில் ஏதேனும் எதிர்ப்புகள் காணப்பட்டால் அது 2022.11.25 ஆந் திகதிக்கு முன் எழுத்து மூலம் எனக்கு அறிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

அம்பாறை நிருவாக மாவட்டத்தின் தெஹியத்தகண்டிய பிரதேச செயலாளர் பிரிவின் விந்தென்ன பற்றுவையின்/கோரளையின் நவமெதகம கிராம அலுவலர் பிரிவின் வெவ்கம எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளரிடம் உள்ளதும், நில அளவையாளர் நாயகத்தின் மூலம் திரட்டப்பட்ட இலக்கம் - ஐ உடைய காணித் துண்டுகளைப் பிரிக்கும் வரைபடத்தின் மு. பி. அம். 1066 இனால் தயாரிக்கப்பட்ட இலக்கம் - ஐ உடைய ரேகை தடயத்தின் இலக்கம் 44 ஐ உடைய காணித்துண்டாகக் காணப்படுள்ளதும் விஸ்தீரணத்தில் ஹெக்டயார்/ ஏக்கர் 1.002 றூட் - பேர்ச் - வுள்ளதும் கீழே காட்டப்பட்டுள்ளவாறு எல்லைத் துண்டுகளுமான அரசகாணி .

வடக்கு : இல. 22 ஐ உடைய காணித்துண்டு;
கிழக்கு : இல. 22, மற்றும் இல. 43 ஐ உடைய காணித்துண்டுகள்;
தெற்கு : இல. 48 ஐ உடைய காணித்துண்டு;
மேற்கு : இல. 48, மற்றும் இல. 21 உடைய காணித்துண்டுகள்.

ஐ. எம். யூ. கே. குமார,
வதிவிட திட்ட முகாமையாளர்,
சீ. வலயம்,
தெஹியத்தகண்டிய.

10- 339

---

இணைப்பு - 09

**காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்**

**காணி அபிவிருத்திக் கட்டளை சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

மத்திய மாகாண சபையின் நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர்/ பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடைப்பட்ட) ஏ. ஏ. விதுர சம்பத் ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளை சட்டத்தின் 19(4) ஆம் உட்பிரிவின் கீழ் அதி உத்தம சனாதிபதி அவர்களினால் 1995, நவெம்பர் 30 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள மத்திய/நுவ/ 783 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான ரத்னகிரிய லெமலியர் தோட்டம் என்னும் முகவரியில் வசிக்கும் திருமதி மங்கம்மா வைத்தியலிங்கம் என்பவருக்கு கையளிக்கப்பட்டு மாவட்ட பதிவாளர், அலுவலகத்தில் நுவ/34/1654/96 ஆம் இலக்கத்தின் கீழ் 1996.04.01 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள காணிக்குப் பின்னுரிமையாளரவதற்குச் சட்ட

ரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தினால் அல்லது உரிமையானவர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கபடவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால், குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத் தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 25.11.2022 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

நுவரெலியா நிருவாக மாவட்டத்தின் நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவின் திம்புளை கோரளையிலுள்ள ரத்னகிரிய கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த லெமலியர் தோட்டம் என்னும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நுவரெலியா பிரதேச செயலாளர் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நுவி/81/89 ஆம் இலக்க வரைபடத்தில் ...................... ரேகை வரைதாளில் 269 ஆம் இலக்கக் காணித் துண்டு எனக் காட்டப்பட்டுள்ளதும் ஹெக்டயார்/ஏக்கர் றூட் 02 விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு:

வடக்கு : வீதி;
கிழக்கு : கோவிந்தசாமி பெருமாள் அவர்களின் காணி;
தெற்கு : வீதி;
மேற்கு : துண்டு இலக்கம் 284 மற்றும் துண்டு இலக்கம் 285.

ஏ. ஏ. விதுர சம்பத்,
பிரதேச செயலாளர்,
நுவரெலியா.

2021.10.19.

10- 381/1

---

இணைப்பு - 09

**காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்**

## காணி அபிவிருத்திக் கட்டளை சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

மத்திய மாகாண சபையின் நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர்/ பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடைப்பட்ட) ஏ. ஏ. விதுர சம்பத் ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளை சட்டத்தின் 19(4) ஆம் உட்பிரிவின் கீழ் அதியுத்தமராம் உத்தம சனாதிபதி அவர்களினால் 1988.03.24 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள நுவ/பிர/5225 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான நானுஓயா, பங்கலாஹத என்னும் முகவரியில் வசிக்கும் திருமதி விஜேகோன் முதியன்சேலாகே தனவதி என்பவருக்கு கையளிக்கப்பட்டு மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் நுவ/23/673/88 இலக்கத்தின் கீழ் 1988.05.11 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள காணிக்குப் பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தினால் அல்லது உரிமையானவர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கபடவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 25.11.2022 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

நுவரெலியா நிருவாக மாவட்டத்தின் நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவின் ஒயபலாத்த பற்றிலுள்ள/கோரளையிலுள்ள பங்கலாஹத கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பங்கலாஹத என்னும் கிராமத்தில் அமைந்துள்ளதும், - பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட - ஆம் இலக்க வெளிக்களத் தாளில் மு. பி. நு. 979 ஆம் இலக்க துண்டுகள் பிரிக்கும் வரைபடத்தில் 05 ஆம் இலக்கக் காணித் துண்டு எனக் காட்டப்பட்டுள்ளதும் ஹெக்டயார்/ஏக்கர் 0.139 றூட் - விஸ்தீரணமுள்ளதும் மாகொடை பத்தனை எனும் காணியின் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித் துண்டு:

வடக்கு : மு. பி. நு 979 இல் துண்டு இலக்கம் 01;
கிழக்கு : மு. பி. நு 979 இல் துண்டு இலக்கம் 06 மற்றும் 07;
தெற்கு : மு. பி. நு 979 இல் துண்டு இலக்கம் 14;
மேற்கு : மு. பி. நு 979 இல் துண்டு இலக்கம் 04.

ஏ. ஏ. விதுர சம்பத்,
பிரதேச செயலாளர்,
நுவரெலியா.

2021.07.11.

10- 381/2

---

இணைப்பு - 09

**காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்**

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

மத்திய மாகாண சபையின் நுவரெலிய மாவட்டத்தில் அமைந்துள்ள நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர்/ பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடைப்பட்ட) ஏ. ஏ. விதுர சம்பத் ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளை சட்டத்தின் 19(4) ஆம் உட்பிரிவின் கீழ் அதி உத்தம சனாதிபதி அவர்களினால் 1994, ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள மத்திய/ நுவ/ 350 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான பெரகும்புர என்னும் முகவரியில் வசிக்கும் திருமதி வீரசங்கிலிகே சாந்தி என்பவருக்கு கையளிக்கப்பட்டு மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் நுவ/ 29/ 498/ 94 ஆம் இலக்கத்தின் கீழ் 1994.07.05 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள காணிக்குப் பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தினால் அல்லது உரிமையானவர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கபடவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத் தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2022.11.25 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

நுவரெலியா நிருவாக மாவட்டத்தின் நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவின் ஒயபலாத்த பற்றிலுள்ள/கோரளையிலுள்ள பெரகும்புர கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த நானுஓயா என்னும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நுவரெலியா பிரதேச செயலாளர் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட - இலக்க வெளிக்களத் தாளில் எப். எஸ். பி. பி. 54ஏ/அ. அ. 2 ஆம் இலக்க வரைபடத்தில் - இரேகை வரைதாளில் 67 ஆம் இலக்கக் காணித்துண்டு எனக் காட்டப்பட்டுள்ளதும் ஹெக்டயார்/ஏக்கர் 0.448 றூட் - விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித் துண்டு:

வடக்கு : துண்டு இலக்கம் 66 மற்றும் 60;
கிழக்கு : துண்டு இலக்கம் 60 மற்றும் 69;
தெற்கு : துண்டு இலக்கம் 69 மற்றும் 66;
மேற்கு : துண்டு இலக்கம் 66.

ஏ. ஏ. விதுர சம்பத்,
பிரதேச செயலாளர்,
நுவரெலியா.

2022.01.11.

10- 381/3

இணைப்பு - 09

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

**காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் உறுப்புரையின் கீழ் வெளியிடப்பட்ட பிரதான ஆவணத்தை தடை செய்தல் - (104 ஆவது உறுப்புரை தொடர்பான அறிவித்தல்)**

*மத்திய மாகாண சபை நுவரெலிய மாவட்ட வலப்பனை பிரதேச செயலக பிரிவின் பிரதேச செயலாளரான ஆர். ஏ. விஜேசிங்க எனும் நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 (4) உப உறுப்புரைக்கு அமைய மதிப்புக்குரிய சனாதிபதி அவர்களால் 1982.11.25 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள இலக்கம் நு/வ/பி 655 எனும் மூல ஆவணத்தின் உரிமையாளரான ஹரஸ்பெத்தவில் வசிக்கும் மெதபத்தன கெதர சொதனாவிற்கு வழங்கப்பட்டு நுவரெலிய மாவட்ட பதிவு காரியாலயத்தின் இல வல/10/57/85 இன் கீழ் 1985.07.03 ஆந் திகதி பதிவு செய்யப்பட்ட கீழ்வரும் அட்டவணையில் காணப்படும் காணிக்கு வாரிசு ஒருவர் சட்டப்படி இன்மையால் அல்லது உரிமையாளர் ஒருவர் இருந்த போதிலும் அவர் வாரிசாக விருப்பமின்மையால் வாரிசு ஒருவர் இல்லை என அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளது. எனவே இவ் ஆவணத்தை உரிய சட்டத்தின் 104 ஆவது உறுப்புரையின் கீழ் நிராகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றேன். இது தொடர்பில் எதிர்ப்புக் கருத்துக்கள் இருக்குமாயின், 2022.11.25 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் எனக்கு அறியத்தரவும்.*

**அட்டவணை**

*நுவரெலியா நிருவாக மாவட்டத்தின் வலப்பனை செயலாளர் பிரிவின் யடிபலாத்த பிரிவில் 526பீ ஹஸ்பெத்த தெற்கு கிராம அலுவலர் பிரிவில் ஹரஸ்பெத்த எனும் கிராமத்தில் அமைந்துள்ள ...................... வசமுள்ள மற்றும் நில அளவையாளரால் தொகுப்பு எண் ................................... கொண்ட வயல் நில பத்திரத்தில் ................................ தொகுப்பு எண் F. V. P. 250 எனும் தொகுதியின் திட்டத்தில் .......................... யால் தொகுப்பெண் ................................ கொண்ட வரைபு அட்டவணையில் இலக்கம் 220 கொண்ட நிலத்துண்டாக அடையாளப்படுத்தப்பட்டு உள்ளதுடன் அளவில் ஹெக்டயார்/ ஏக்கர் .............. றூட் பேர்ச் 20 விசாலமான கீழுள்ளவாறு எல்லைகளைக் கொண்ட அரச நிலம்.*

வடக்கு : F. V. P. 250 E துண்டு இலக்கம் 220;
கிழக்கு : F. V. P. 250 P துண்டு இலக்கம் 56;
தெற்கு : F. V. P. 250 E துண்டு இலக்கம் 222;
மேற்கு : F. V. P. 250 E துண்டு இலக்கம் 50.

ஆர். ஏ. விஜேசிங்க,
பிரதேச செயலாளர்,
வலப்பனை.

*2021, திசெம்பர் 06.*

*10- 381/4*

---

இணைப்பு - 09

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

**காணி அபிவிருத்தி கூட்டத்தின் 19 ஆம் உறுப்புரையின் கீழ் வெளியிடப்பட்ட பிரதான ஆவணத்தை தடைசெய்தல் - (104 வது உறுப்புரை தொடர்பான அறிவித்தல்)**

*மத்திய மாகாணம், நுவரெலியா மாவட்டம், வலப்பனை பிரதேச செயலக பிரிவின் பிரதேச செயலாளரான ஆர். ஏ.விஜேசிங்க எனும் நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 (4) உப உறுப்புரைக்கு அமைய மதிப்புக்குரிய சனாதிபதி அவர்களால் 1982.11.25 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள இலக்கம் நு/வ/பி 656 எனும் மூல ஆவணத்தின் உரிமையாளரான ஹரஸ்பெத்தவில் வசிக்கும் மெதபத்தன கெதர சொதனவிற்கு வழங்கப்பட்டு நுவரெலிய மாவட்ட பதிவு காரியாலயத்தின் இல. வல/10/58/85 இன் கீழ் 1985.07.03 ஆந் திகதி பதிவு செய்யப்பட்ட கீழ்வரும் அட்டவணையில் காணப்படும் காணிக்கு வாரிசு ஒருவர் சட்டப்படி இன்மையால் அல்லது உரிமையாளர் ஒருவர் இருந்த போதிலும் அவர் வாரிசாக விருப்பமின்மையால் வாரிசு ஒருவர் இல்லை என அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளது. எனவே இவ் ஆவணத்தை உரிய சட்டத்தின் 104 ஆவது உறுப்புரையின் கீழ் நிராகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றேன். இது தொடர்பில் எதிர்ப்புக் கருத்துக்கள் இருக்குமாயின் 2022.11.25 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் எனக்கு அறியத்தரவும்.*

**அட்டவணை**

நுவரெலியா நிருவாக மாவட்டத்தின் வலப்பனை செயலாளர் பிரிவின் யடிபலாத்த பிரிவில் 526பீ ஹஸ்பெத்த தெற்கு கிராம அலுவலர் பிரிவில் ஹரஸ்பெத்த எனும் கிராமத்தில் அமைந்துள்ள ...................... வசமுள்ள மற்றும் நில அளவையாளரால் தொகுப்பு எண் .... ............................... கொண்ட வயல் நில பத்திரத்தில் ................................ தொகுப்பு எண் F. V. P. 250 எனும் தொகுதியின் திட்டத்தில் ........................... யால் தொகுப்பெண் ................................ கொண்ட வரைபு அட்டவணையில் இலக்கம் 222 கொண்ட நிலத்துண்டாக அடையாளப்படுத்தப்பட்டு உள்ளதுடன் அளவில் ஹெக்டயார்/ ஏக்கர் ........ றூட் பேர்ச் 19 விசாலமான கீழுள்ளவாறு எல்லைகளைக் கொண்ட அரச நிலம்:

வடக்கு : F. V. P. 250 E துண்டு இலக்கம் 221;
கிழக்கு : F. V. P. 250 P துண்டு இலக்கம் 56;
தெற்கு : F. V. P. 250 E துண்டு இலக்கம் 224;
மேற்கு : F. V. P. 250 E துண்டு இலக்கம் 51.

ஆர். ஏ. விஜேசிங்க,
பிரதேச செயலாளர்,
வலப்பனை.

2021.12.08

10- 381/5

## நானாவித காணி அறிவித்தல்கள்

### காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்

காணி ஆணையாளர் ஜெனரால் குறிப்பு இல: 4/10/57497.
மாகாணங்களுக்கு இடையிலான காணி ஆணையாளர் குறிப்பு இல: DLC/PL/A5/2/1/2.

### அரச காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படும் அறிவித்தல்

பொலன்னறுவை மாவட்டத்தில் ஹிங்குரக்கொட பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட இல. 80, சாமபுர அலுவலகர் பிரிவில் சாமபுர கிராமத்தில் இல. அ. ஐ. பி. பொ. 129 அதி. இல. 14 ஆம் வரைபடத்தில் 207 ஆம் இலக்கமாக விபரிக்கப்பட்டுள்ள 16.898 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ள காணியை வர்த்தக நடவடிக்கைகளுக்காக இலங்கை தேசிய கிரிக்கெட் நிறுவனத்தினால் குத்தகைக்கு கோரப்பட்டுள்ளதாக இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

02. கோரப்படும் காணியின் எல்லைகள் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளன :

வடக்கு : 208, 67 1/2, 185, 203 மற்றும் 185 ஆம் காணித்துண்டுகள்;
கிழக்கு : 185, 203, 91, 205, 187, 186, 206 மற்றும் 208 ஆம் காணித்துண்டுகள்;
தெற்கு : 205, 187, 186, 206 மற்றும் 208 ஆம் காணித்துண்டுகள்;
மேற்கு : 208 மற்றும் 67 1/2 ஆம் காணித்துண்டுகள்.

கோரப்பட்டுள்ள காணியை அத்தியாவசிய காரணங்களின் பேரில் குத்தகைக்கு வழங்க முடியும். ஆகையால் அரசால் வழங்கப்பட்டுள்ள ஏனைய நிபந்தனைகள் மற்றும் கீழ்காணும் நிபந்தனைகளின் கீழ் கட்டுப்பட்டு பின்வரும் காணியை குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகை காலம்** .- முப்பது 30 வருடங்கள் (06.06.2022 தொடக்கம் 05.06.2052 வரை)

**வருடாந்த குத்தகைப் பணம்**.- குத்தகை நடைமுறைக்கு வரும் வருடத்தில் காணியின் அளவை மதிப்பீடு ரூபாய் 5 மில்லியனுக்கும் (ரூ. 5,000,000.00) குறையும் சந்தர்ப்பத்தில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தை மதிப்பீட்டில் 2% ஆகும். குத்தகை நடைமுறைக்கு வரும் வருடத்தில் காணியின் மதிப்பீட்டு பெறுமதி ரூபாய் 5 மில்லியனுக்கும் (ரூ. 5,000,000.00) அதிகரிக்கும் சந்தர்ப்பத்தில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தை மதிப்பீட்டில் 4% ஆகும். இந்த குத்தகைத்தொகை ஒவ்வொரு 05 வருடங்களுக்கு ஒரு முறை திருத்தப்பட வேண்டுமென்பதுடன் அவை முதல் 05 வருடங்களின் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகை தொகைக்கு 20% சேர்க்கப்படுதல் வேண்டும்.

*பிரீமியம்:* பிரீமியம் அறவிடப்படமாட்டாது.

(அ) குத்தகைகாரர்கள், குத்தகை ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து ஒரு (01) வருட காலத்திற்குள், மாகாண ஆணையாளர்/ பிரதிக் காணி ஆணையாளர்/ பிரதேச செயலாளரின் திருப்திக்கு ஏற்ப மேற்படி காணியை அபிவிருத்தி செய்ய வேண்டும்;

(ஆ) குத்தகைகாரர்கள் குறித்த நிலத்தை வணிக நடவடிக்கை களுக்குத் தவிர வேறு எதற்கும் பயன்படுத்தக்கூடாது;

(இ) இந்த குத்தகையானது மாகாண காணி ஆணையாளர்/ பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களால் விதிக்கப்பட்ட விசேட நிபந்தனைகளுக்கும் உட்பட்டது;

(ஈ) தற்போதுள்ள/கட்டப்பட்ட கட்டிடங்கள் சரியான முறையான நிலையில் பராமரிக்கப்பட வேண்டும்;

(உ) குத்தகைகாரர் குறிப்பிட்ட காலத்திற்குள் காணியை பெற்றுக்கொண்ட நோக்கத்தை நிரூபிக்கத் தவறினால், குத்தகை ஒப்பந்தத்தை இரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஊ) 2022.06.06 ஆம் திகதியிலிருந்து 5 ஆண்டுகள் வரை உப குத்தகைக்கு அல்லது காணி ஒதுக்கீட்டுக்கோ எந்த அனுமதியும் வழங்கப்படாது;

(எ) குத்தகை வாடகையை செலுத்துவது தவறாமல் மேற்கொள்ளப்பட வேண்டும், மேலும் பணம் செலுத்துவதற்கு தவறும்பட்சத்தில், ஒப்பந்தம் காலாவதியாகிவிடும். குத்தகைத் தொகை தொடர்ந்து செலுத்தப்படாத சந்தர்ப்பங்களில், செலுத்த வேண்டிய குத்தகைத் தொகையின் மீது அபராத வட்டியில் 10% வசூலிக்கப்படும்.

வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 06 வாரங்களுக்குள், குறித்த இந்தக் காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடாது என்பதற்கான ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் எழுத்துப்பூர்வமாக என்னிடம் சமர்ப்பிக்கப்படாவிட்டால், கோரப்பட்ட காணி குத்தகைக்கு விடப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

டபிள்யூ. வி. டி. டி. அமரசிங்க,
பிரதிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
'மிஹிகம மெதுர' காணிச் செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை.
2022.10.10

10 - 379

---

## காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகம் இலக்கம்: 4/10/66009.
காணி ஆணையாளர் நாயகம் (மேலதிக மாகாண) இலக்கம்: NCP/PLC/16/L6/ ஹிங்/01.

### 21(2) ஆம் இலக்க அரச காணி தொடர்பான விதிமுறைகளின் கீழ் வெளியிடப்படுகின்ற அறிவித்தல்.

பொலன்னறுவை மாவட்டம், ஹிங்குரக்கொடை பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட இல. 54, சி. பி. புர, கிராம உத்தியோகத்தர் பிரிவில் சி. பி. புர எனும் ஊரில் காணி அதிகாரியினால் வரையப்பட்ட மேலோட்டமான வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள ஏறக்குறைய 02 ரூட் (80 பேர்ச்) விசாலமான காணித்துண்டை வர்த்தக நடவடிக்கைகளுக்கான திரு. வீரசூரிய முதியன்செலாகே ஆரியவங்ச வீரசூரிய என்பவரினால் குத்தகைக்கு கோரியுள்ளார் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

02. கோரப்படும் காணியின் எல்லைகள் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது :

வடக்கு : F. C. P. 09 ஜாயா இர ரிசோட் அமைந்துள்ள காணி;
கிழக்கு : இராணுவ பொலிஸ் நிலையம் அமைந்துள்ள காணி;
தெற்கு : பழைய நேதாஜி ஹோட்டல் அமைந்துள்ள காணி;
மேற்கு : வீதி ரக்சித.

02. கோரப்பட்டுள்ள காணித்துண்டை தேவைப்படும் விடயத்திற்காக குத்தகைக்கு வழங்க முடியும் அதனால் அரசாங்கத்தின் ஏற்றுக் கொள்ளப்பட்ட இதர நிபந்தணைகளின் கீழ் காணியை குத்தகைக்கு வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது வருடங்கள் (30) (2022.09.19 தொடக்கம் 2052.09.18)

**வருடாந்த குத்தகைப் பணம்** .- குத்தகை நடைமுறைப்படுத்தப்படும் வருடத்தில் மதிப்பிடப்பட்ட காணியின் பெறுமதி ரூபா ஐந்து மில்லியனை (ரூ.5,000,000.00) விட குறைவடைகின்ற சந்தர்ப்பங்களில் பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் படி அவ்வருடத்திற்குரிய காணியின் சந்தை பெறுமதியின் 2% ஆகும். குத்தகை நடைமுறைப்படுத்தப்படும் வருடத்தில் இக் காணிக்கான மதிப்பீட்டு பெறுமானம் ரூபா ஐந்து மில்லியனை (ரூ. 500,000.00) விட அதிகரிக்கின்ற சந்தர்ப்பங்களில் பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் படி அவ்வருடத்திற்குரிய காணியின் சந்தை பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணம் ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கும் ஒரு தடவை திருத்தப்படல் வேண்டும். அத்துடன் அது முன்னைய ஐந்து வருட முடிவில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகைப்பணத்துடன் 20% சேர்க்கப்படல் வேண்டும்.

*தவணைப்பணம்:* தவணைப் பணம் அறவிடப்பட மாட்டாது.

(இ) இக்குத்தகை தொடங்கி ஒரு வருடத்திற்குள் மாகாண காணி ஆணையாளர்/பிரதி காணி ஆணையாளர்/ பிரதேச செயலாளரின் மனதை கவரும் வகையில் அபிவிருத்தி செய்தல் வேண்டும்;

(ஈ) இக் காணித்துண்டை வர்த்தக நடவடிக்கைகளுக்கு அன்றி வேறு நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தக் கூடாது;

(உ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுகின்ற விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை உட்படுதல் வேண்டும்;

(ஊ) நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டடங்கள் முறையாக அபிவிருத்தி செய்யப்பட்டு நல்ல நிலையில் பராமரிக்கப்படல் வேண்டும்;

(எ) காணி குத்தகைக்கு கொடுக்கப்பட்டுள்ள காலத்தில் குத்தகைக்காரினால் குறிப்பிட்ட காலத்திற்குள் காணி எடுக்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு இயலாது போகும் பட்சத்தில் குத்தகையினை முடிவுக்கு கொண்டு வருவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) குத்தகை நடைமுறைக்கு வந்த தினத்திலிருந்து 05 வருடங்கள் முடியும் வரை இந்த இடம் குத்தகைக்குப் பெறப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கான இடைக்கால குத்தகை அல்லது ஒப்படைத்தல் தவிர்ந்த வேறு இடைக்கால குத்தகை அல்லது ஒப்படைத்தலுக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஐ) குத்தகைப் பணம் தொடர்ச்சியாக செலுத்தப்படுல் வேண்டும், அதே நேரம் குத்தகை தவறவிடப்படும் சந்தர்ப்பத்தில் ஒப்பந்தம் இயல்பாகவே செல்லுபடியற்றதாகி விடும். தொடர்ந்து குத்தகை செலுத்தப்படாமல் இருந்தால் செலுத்தப்பட வேண்டிய நிலுவையில் உள்ள குத்தகைப் பணத்தின் பேரில் தண்ட வட்டி 10% அறவிடப்படும்.

இக்காணியை குத்தகைக்கு வழங்க முடியாது என்பதாக கருதினால் இவ்வறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து 06 வாரங்களுக்குள் அதற்கான காரணங்களை எழுத்து மூலம் எனக்கு சமர்ப்பிக்கப்படாவிட்டால் விண்ணப்பத்திற்கு ஏற்ப காணி குத்தகைக்கு வழங்கப்படும்.

டபிள்யூ. வீ. ரீ. டீ. அமரசிங்ஹ,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகம் சார்பாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
'மிஹிகம மெதுர' காணிச் செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை.

2022.10.10.

10 - 380

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.